ஜூரிஸ்டிக்ஷன் தாண்டி வந்து முத்திரைக் காகிதங்களை வாங்கிச் சென்று அதிக விலைக்கு விற்கின்ற சூழ்நிலையும் இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் தென்காசியிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து முத்திரைக் காகிதங்களை வாங்கிக் கொண்டு போய் அங்கே அதிக விலைக்கு விற்கின்ற நிலைமை ஏற்படுவதால் சென்னையில் தட்டுப்பாடு வருகிறது. இதைப்போன்று மற்ற இடங்களிலும் ஏற்படும். இந்த நிலையைப் போக்க, அந்த அந்த ஜூரிஸ்டிக்ஷனுக்குள் வாங்கக் கூடிய முத்திரைக் காகிதம்தான் செல்லுபடியாகும் என்று உத்தரவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, உரிய விலைக்கு மேல் விற்றால் அப்படி விற்கின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்காவது இப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்று சுட்டிக்காட்டினால் சம்பந்தப்பட்ட பதிவாளருக்கு தகவல் கொடுத்து, சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதிக விலைக்கு விற்பவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படும். முத்திரைத் தாள் தட்டுப்பாட்டை உத்தேசித்து பொது மக்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்க முத்திரைச் சட்டத்தின் பிரிவு 41-ன்படி முத்திரைத் தாள்களுக்கு சமமான தொகையை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போன்று நீதி மன்றங்களிலும் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1987-88, அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1987-88 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப்* பேரவை முன் வைக்கிறேன்.

---

* 510–513 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.